செய்தி வெளியீடு எண்: 391 நாள்: 27.02.2024

<u>செய்தி வெளியீடு</u>

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் மத்திய சதுக்கத் திட்டத்தின் கீழ் ரூ.9.75 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள சுரங்க நடைபாதை – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (27.2.2024) தலைமைச் செயலகத்தில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் மத்திய சதுக்கத் திட்டத்தின் கீழ், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் சென்னை மருத்துவக் கல்லூரி அருகாமையிலும், ஈவினிங் பஜார் சாலை மற்றும் பூந்தமல்லி நெடுஞ்சாலை சந்திப்பிற்கு குறுக்கேயும் 9 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சுரங்க நடைபாதையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

சென்னை சென்ட்ரல் பகுதியை ஒரு உலகத்தரம் வாய்ந்த அடையாளமாக மேம்படுத்தும் நோக்கத்தில், மத்திய சதுக்கத் திட்ட கட்டுமானப் பணிகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம், புறநகர் இரயில் முனையம், பூங்கா இரயில் நிலையம் (புறநகர்), பூங்கா நகர் இரயில் நிலையம் (துரித இரயில் போக்குவரத்து அமைப்பு), சென்ட்ரல் மெட்ரோ நிலையம், ரிப்பன் மாளிகை (பெருநகர சென்னை மாநகராட்சி), தென்னக இரயில்வே பொது மேலாளர் அலுவலகம் மற்றும் இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை ஆகியவற்றிற்கிடையே பொதுமக்கள் எளிதில் சென்று வருவதற்கு ஏதுவாக, மத்திய சதுக்கம் ஒரு முத்தாய்ப்பான பன்முக போக்குவரத்து ஒருங்கிணைப்பு மையமாக செயல்பட்டு வருகிறது.

மத்திய சதுக்கத் திட்ட மேம்பாட்டின் ஒரு பகுதியான முதலாம் சுரங்க நடைபாதை மற்றும் நில மேம்பாட்டு பணிகள் 34 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.3.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**<u>சென்னை மத்திய சதுக்கத் திட்டத்தின் சுரங்க நடைபாதை</u>**

இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் சென்னை மருத்துவக் கல்லூரி அருகாமையிலும், ஈவினிங் பஜார் சாலை மற்றும் பூந்தமல்லி நெடுஞ்சாலை சந்திப்பிற்கு குறுக்கேயும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நிதியுதவியுடன் 9 கோடியே 75 இலட்சம் ரூபாய்

செலவில் புதியதாக சுரங்க நடைபாதை கட்டப்பட்டுள்ளது. இந்த சாலைகளின் சந்திப்பில் பாதசாரிகள் பாதுகாப்பற்ற முறையில் குறுக்கே செல்வதை தடுப்பதற்காகவும், இப்பகுதியில் சாலைகளை பொதுமக்கள் சிரமமின்றி கடந்து செல்லுவதற்காகவும், இந்த சுரங்க நடைபாதை பயன்படும்.

இந்த சுரங்க நடைபாதையில் இரண்டு நகரும் படிக்கட்டுக்கள் உள்ளன. ஒன்று இராஜீவ் காந்தி அரசு பொதுமருத்துவமனை மற்றும் சென்னை மருத்துவக் கல்லூரி பகுதியிலும், மற்றொன்று பைபிள் சொசைட்டி மற்றும் தென்னக இரயில்வே பொது மேலாளர் அலுவலகப் பகுதியிலும் அமைந்துள்ளன. பயணிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளுடன், ஒளியூட்டப்பட்ட பெயர்பலகைகள் சுரங்க நடைப்பாதையின் உட்பகுதியிலும், வெளிபுறத்திலும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதிமாறன், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., சிறப்பு முயற்சிகள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ரமேஷ் சந்த் மீனா, இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் திரு. அன்ஷுல் மிஸ்ரா, இ.ஆ.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

...........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in